සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
කාන්තා, ළමා කටයුතු හා සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Women, Child Affairs and Social Empowerment

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/06/EP/01/சுற்றறிக்கை /2023 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2023.01.27 |
|---|---|---|---|---|---|

சமுர்த்தி சுற்றறிக்கை **இல2023/02**

சகல மாவட்ட செயலாளர்கள் /மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்
சகல பிரதேச செயலாளர்கள்
சகல மாவட்ட சமுர்த்தி பிரதி /உதவிப்பணிப்பாளர்கள்
சகல தலைமைபீட ,கருத்திட்ட வங்கிச்சங்க சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள்
சகல சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு

## சமுர்த்தி சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டம்-2023

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெரும் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை நிலைபேறான விதத்தில் நடாத்திச்செல்லும் பொருட்டு சந்தைப்படுத்தல் வேலைத்திட்ட்ங்கள் தொழிலை நோக்காக கொண்ட பல்வேறு பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதனூடாக சிறந்த தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி இன் நாட்டின் தேசிய உற்பத்தியினை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு பங்களிப்பினை செலுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 சந்தைப்படுத்தல் அபிவிருத்தி திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைத்திட்த்தின் பொருட்டு முக்கியமான கவனத்தினை செலுத்தி செயற்படவுள்ளது.

1. சிறியளவிலான விற்பனையகங்களை ஆரம்பித்தல்
2. சமுர்த்தி ஆரோக்கிய உணவகங்கள், விற்பனை நிலையங்களை மேம்படுத்துவதும் விற்பனைச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதும்
3. புதிய உணவகங்களை ஆரம்பித்தல்
4. சமுர்த்தி அபிமானி விற்பனைக்காட்சி
5. தொழில்முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம்
6. இணையத்தளத்தினூடாக பொருட்களை விற்பனை செய்தல்- Online Marketing
7. வர்த்தக சங்கங்களை ஆரம்பித்தல்
8. மொழித்திறமையினை வழங்கும் பொருட்டு பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.
9. சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளின் பொருட்டு தரச்சான்றிதழை வழங்குதல்.
10. தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்
11. நச்சுப்பொருட்கள் அற்ற உணவு உள்ளூர் உணவுகள் பற்றிய பயிற்சி வேலைத்திட்டம்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line: 0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

1. **சிறிய அளவிலான விற்பனையகங்களை அமைத்தல்**

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் உற்பத்திகளை விற்பனை செய்யும் பொருட்டு சந்தர்ப்பம் ஒன்றினை ஏற்படுத்துவது அடிப்படைக் குறிக்கோளாகும்.மேலும் அத்தியவசியமான சந்தர்ப்பங்களில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற நுகர்வுப்பொருட்களை விநியோகிக்கும் பொருட்டும் இவ் விற்பனையகங்களை பயன்படுத்திக் கொள்ளமுடியும். மேலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதன் காரணமாக வாடிக்கையாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ள இக் காலப்பகுதியில் நியாயமான விலையில் தனது வீட்டுக்கண்மையிலிருந்து அத்தியாவசியமான பொருட்களை கொள்வனவு செய்யவும் சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் ஏற்கனவே விற்பனையகம் ஒன்றை நடாத்திச் செல்லும் அல்லது எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கும் உத்தேசித்துள்ள கருத்திட்டபயனாளிகளின் தொடர் வருமானத்தினை விருத்தி செய்வதும் இந்த கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

மேலும்,இங்கு 2022ம் ஆண்டில் தங்களால் வங்கி வலயம் ஒன்றுக்கு ஒன்று என்ற வீதம் கருத்திட்ட பயனாளிகளை இனங்காணும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்துள்ளதுடன் 2023ம் ஆண்டில் பிரிவொன்றுக்கு ஒன்று என்ற வகையில் இக் கருத்திட்ட பயனாளிகளை இனங்காண வேண்டியுள்ளது. இவ் விற்பனையகங்களின் பொருட்டு பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொள்கின்ற தனியார் நிறுவனங்களை தொடர்புபடுத்துவதனூடாக கூடுதலான தரகுகளுடன் பண்டங்களையும் உற்பத்திகளையும் வழங்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் ஒருங்கிணைப்பு செய்து கொடுக்கப்படும்.

2. **சமுர்த்தி ஆரோக்கிய உணவகங்கள், விற்பனை நிலையங்களை மேம்படுத்துவதும் விற்பனை சந்தை அபிவிருத்தியும்**

2023ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் மிக வரையறுக்கப்பட்டுள்ளதனால் தற்போது செயற்படுகின்ற ஆரோக்கிய உணவகங்கள், விற்பனை நிலையங்கள் மற்றும் விற்பனை சந்தைகளின் அத்தியவசியமான மேம்படுத்தல்களை மேற்கொள்வதன் பொருட்டு மாத்திரம் கவனத்தினை செலுத்தி அதற்குரிய மதிப்பீட்டினை தயாரித்து சமர்ப்பிக்க சந்தர்ப்பம் உள்ளது.

3. **புதிய உணவகங்களை ஆரம்பித்தல்**

2023ம் ஆண்டில் புதிய நிர்மாணிப்புக்களின் பொருட்டு நிதியொதுக்கீட்டினை வழங்குவதற்கு முடியாதுள்ளதால் தங்களது பிரதேசத்தில் உள்ள அரசாங்கத்துக்கு சொந்தமான பயன்படுத்தப்படாத கட்டிடங்கள் இருப்பின் நீண்டகால வாடகை அடிப்படையில் அவற்றினைப் பெற்றுக்கொண்டு அந்த இடங்களில் சமுர்த்தி ஆரோக்கிய உணவகங்கள் அல்லது விற்பனை நிலைய கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆகையினால் இதன் பொருட்டு பொருத்தப்பாடுகள் உள்ள தகுதியான இடத்தினை இனங்கண்டு அத்தகவல்களை வழங்குதல் வேண்டும். அத்துடன் அரசாங்க நிறுவனங்களில் உணவகங்களை ஆரம்பிப்பதற்கு இடவசதிகள் உள்ள இடங்களை இனங்கண்டு அந்த நிறுவனங்களை ஒருங்கிணைப்பு செய்துகொண்டு அங்கு உணவு உற்பத்தி விற்பனையின் பொருட்டு குறைந்த வருமானம் பெறும் ஆட்களை ஈடுபடச்செய்வது பொருத்தமானதாகும்.

4. **சமுர்த்தி அபிமானி விற்பனைக் கண்காட்சியினை நடத்துதல்**

இக் கண்காட்சி இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் தங்களது மாவட்டத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.சமுர்த்தி வங்கி/சமுதாய அடிப்படை வங்கிச்சங்க மட்டத்தில் இவ் விற்பனைக் கண்காட்சியினை ஒழுங்கு செய்ய வேண்டியதுடன் தமிழ் சிங்கள புத்தாண்டினை இலக்காகக் கொண்டு ஏப்ரல் மாதம் 7-10க்கும் இடைப்பட்ட காலங்களுக்குள் நடாத்துதல் வேண்டும். சமுர்த்தி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளின் பொருட்டு சந்தை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு இது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருத்துவதனால் இது தொடர்பில் உற்பத்தியாளர்களை விளக்கமளிப்பதற்கு ஆரம்பம் தொட்டே நடவடிக்கைகளை மேற்கொள்வது அத்தியாவசியமாகும். கிடைக்கப்பெற்றுள்ள நிதியொதுக்கீட்டளவு வரையறுக்கப்பட்டுள்ளதனால் இதன் பொருட்டு நிதியொதுக்கீட்டினை ஒதுக்குவதில் சிக்கல் ஒன்று இருப்பதுடன் வங்கிச் சங்கங்களில் உள்ள சந்தை நிதியங்களையும் வர்த்தக சங்கங்களின் நிதியத்தினையும் பயன்படுத்த முடியும். பிரதேச அமைப்புகளின் நிதியை இதன் பொருட்டு ஈடுபடுத்திக் கொள்கின்ற சந்தர்ப்பங்களில் அத் தொகையினை செலவிடுவதற்கு முன்னர் சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வது அத்தியாவசியமானதாகும். மேலும் பிரதேசத்தில் உள்ள அரச அல்லது அரச சார்பற்ற அமைப்புக்கள் தனியார் நிறுவனங்கள் அனுசரணையினையும் இதன் பொருட்டு பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

5. **தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்**

2022ம் ஆண்டில் செயற்படுத்தப்படுகின்ற 8மாவட்டங்களில் YouLead நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் தொடர்சியாக 2023ம் ஆண்டிலும் இக் கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.தற்போது செயற்படுத்தப்படுகின்ற மாவட்டங்களுக்கு மேலதிகமாக எஞ்சியுள்ள மாவட்டங்களில் பிரதேச செயலகப்பிரிவுகளில் மேலும் 300 வேலைத்திட்டங்களை 2023ம் ஆண்டில் YouLead நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வேலைத்திட்டதின் ஊடக பயிற்சியினைப் பெற்ற முகாமையாளர்கள் (TOT) மூலம் தற்போது பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தொழில் முயற்சி பயிற்சியினை வழங்க வேண்டியதுடன் பயிற்சியைப் பெற்றதன் பின்னர் இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி அதிகாரப்பிரதேசங்களில் 100 தொழில் முயற்சியாளர்கள் என்றளவில் பயிற்றுவிற்பதற்கும் பயிற்சியின் பின்னர் பின்பணியாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் வேண்டும்.

6. **இணையத்தளத்தினூடாக பொருட்களை விற்பனை செய்தல் (Online Marketing)**

ஆரம்பத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் பொருட்டு இணையத்தளத்தினூடாக விற்பனை வாய்ப்புக்களை மேம்படுத்துவது இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.இதன் கீழ் குருநாகல் மாவட்டத்தில் முன்னோடிக் கருத்திட்டம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

7. **வர்த்தக சங்கங்களை ஆரம்பித்தல்**

பல்வேறு துறைகளின் ஊடாக கருத்திட்டங்களை செயற்படுத்துகின்ற ஆட்களின் உற்பத்திகளை சிறப்பாக பராமரித்துச் சென்று அவர்களின் தொழில் முயற்சியாற்றல்களை மேம்படுத்துவதற்கும் உள்நாட்டு சந்தைகளை தாண்டிச் சென்று அவர்களை ஏற்றுமதிச் சந்தையில் ஈடுபடச் செய்தல் போன்ற பணிகளின் பொருட்டு உற்பத்தியாளர்களின்/விற்பனையாளர்களின் கூட்டுறவு ஒன்று தேவைப்படுகின்றது. ஆகையினால் இதன் பொருட்டு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் வர்த்தக சங்கங்களை ஆரம்பிப்பது முக்கிய தேவைப்பாடு ஒன்றாகும் என்பதனால் இதன் பொருட்டு கவனத்தினை செலுத்துவது அத்தியவசியமானதாகும். இது தொடர்பிலான சுற்றறிக்கையொன்று 2022.05.18ம் திகதி தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கைகளை

மேற்கொள்வது பொருத்தமானதாகும். பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக சங்கங்களில் கூட்டுறவு ஒன்றினை உருவாக்க வேண்டியதுடன் இதன்பொருட்டு Whatsapp, மற்றும் முகப்புத்தகம்(Face book) பயன்படுத்தலாம். இலங்கை வர்த்தக சபை,சிறுதொழில் முயற்சிப் பிரிவு போன்ற நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு இந்த வர்த்தக சங்கத்தினையும் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் பணிப் பொறுப்பாகும்.

8. **மொழித்தேர்ச்சியினை வழங்கும் பொருட்டான பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.**

சமுர்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் இளைஞர் யுவதிகளுக்கு ஜப்பான் மொழித்தேர்ச்சினையும் தொழித்திறமையினையும் வழங்குவதற்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் ஏழு (7) வேலைத்திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டன.தற்போது ஏற்பட்டுள்ள தொழில்வாய்ப்பு சிக்கல்கள் காரணமாக தொழிலை எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அந்த நாடுகளில் பாவனையில் உள்ள மொழிகளை அறிந்திருப்பது அத்தியவசியமாகும். மொழித்தேர்ச்சி மற்றும் தொழில்பயிற்சியின் பொருட்டு பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில் இலக்கிடப்பட்ட இளைஞர் யுவதிகளை இனங்காண்பது மற்றும் பயிற்சித்திட்டங்களின் பொருட்டு குறித்த மொழித்தேர்ச்சியினை உடைய போதனாசிரியர்களை இணைப்புச் செய்வது மற்றும் தொழில் சார் தேர்ச்சியினை வழங்குவதற்கு இவர்களை ஈடுபடச்செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.ஜப்பான் மொழித்தேர்ச்சியில் N5 மற்றும் N4 மட்டத்திலான பரீட்சையின் பொருட்டு நாடு பூராகவும் 2500 இளைஞர் யுவதிகள் பயிற்றுவிக்கப்படவுள்ளதுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தேசிய சமூக நிறுவனத்தோடு இப் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

9. **சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் உற்பத்தியாளர்களின் பொருட்டு தரச்சான்றிதழ்களை வழங்குதல்.**

சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் பல்வேறு உற்பத்தியாளர்கள் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டப் பயனாளிகளின் உற்பத்திகளை சந்தைக்கு முன் வைக்கும் போது ஏனைய உற்பத்திகளுடன் போட்டி போடுவதாயின் இதன் தர நிலையானது உயர்ந்த மட்டத்தில் இருக்க வேண்டியதுடன் அதன் பொருட்டு தர மற்றும் நியமச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளவேண்டியுள்ளது.

இதன் பொருட்டு இலங்கை தர நியமங்கள் நிறுவனத்தோடு கூட்டிணைந்து சமுர்த்தி உற்பத்தியாளர்களின் பொருட்கள் மற்றும் சேவைகளின் பொருட்டு தர மற்றும் நியமச் சான்றிதழ்களை வழங்க திட்டமிட்டுள்ளது. இதன் பொருட்டு எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளதால் தற்போது தங்களது மாவட்டத்தின் உற்பத்தி மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்களை சேகரித்து வைத்துக்கொள்வது அவசியமானதாகும்.அத்துடன் கருத்திட்ட முகாமையாளரால் தனது பிரதேசத்தில் உள்ள 10உற்பத்தியாளர்களுக்காவது தரமான உற்பத்தி முறையினை (GMP-Good Manufacturing Practice) சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். www.slsi.lk வலைத்தளத்தில் இருந்து சகல தகவலையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

## 10. தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டம்

பாடசாலைக் கல்வியினை பூர்த்தி செய்த (கா.பொ.த/சாதாரண தரம் ,கா.பொ.த/உயர் தரம்) இளவயதுப் பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் அவர்களுக்கு ஈடுபடக்கூடிய தொழில் வாய்ப்புக்கள் தொடர்பில் விளக்கமளிப்பது இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது முன்னோடிகருதிட்டமொன்றாக கம்பஹா மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அனுபவங்களை பயன்படுத்திக்கொண்டு எதிர்காலத்தில் இக் கருத்திட்டத்தினை மேற்கொள்ளவேண்டிய விதம் தொடர்பில் ஆலோசனைகள் தங்களுக்கு வழங்கப்படும்.இலக்கிடப்பட்ட இளைஞர் யுவதிகளின் பொருட்டு தேவையான தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மனித வளங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் திறன்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இங்கு விஷேடமாக தொடர்புபடுத்திக்கொள்ள முடியும்.கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை முடிந்ததன் பின்னர் மார்ச் 13க்கும் 14க்கும் இடைப்பட்ட காலத்துக்குள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவில் இருந்தும் 50மட்டளவிலான இளைஞர் யுவதிகளை தொடர்புபடுத்திக் கொண்டு ஆகக் குறைந்தது ஒரு வேலைத்திட்டதினையாவது நடாத்துதல் வேண்டும்.இங்கு ஒரு பிரிவில் இருந்து இரண்டு பேரையாவது தொடர்புபடுத்தல் வேண்டும்.நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டம் தொடர்பான முன்னேற்றத்தினை சந்தைப்படுத்தல் பிரிவிற்கு வழங்க வேண்டியதுடன் அதன் பொருட்டான Google sheet எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும். மேலும் தொழில் பயிற்சி வேலைத்திட்டங்களின் பொருட்டு இலங்கை

தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கு இளைஞர் யுவதிகளை தொடர்புகொள்ளச் செய்வது மற்றும் உரிய பின்பணியாய்வுகளை மேற்கொள்வது அத்தியவசியமானதாகும்.

**11. நச்சுப் பொருட்களற்ற உணவுகள் உள்ளூர் உணவுகள் பற்றிய பயிற்சி வேலைத்திட்டம்**

சமுர்த்தி ஆரோக்கிய உணவகங்களில் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பெண் தொழில் முயற்சியாளர்களை இலக்காகக் கொண்டு கடந்த ஆண்டுகளில் இப் பயிற்சி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப் பயிற்சி வேலைத்திட்டதிற்கு மேலதிகமாக தற்போது கிராமங்களில் இவ் உற்பத்திகளை மேற்கொள்ளும் நபர்கள் மற்றும் நலன்புரிச்சங்கங்கள்/நிறுவனங்களூடாக நடாத்திச்செல்லப்படுகின்ற சிற்றுண்டிச்சாலைகளில் தற்போது இந்த உற்பத்திகளை மேற்கொள்கின்ற தொழில் முயற்சியாளர்களின் பொருட்டு பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்யும் சந்தர்ப்பமும் உள்ளன.மிக உயர்ந்தமட்டத்தில் உற்பத்திகளை மேற்கொள்ளகின்ற தொழில் முயற்சியாளிப் பெண்கள் இப் பயிற்சி வேலைத்திட்டங்களில் வளனர்களாக ஈடுபடுத்திக்கொள்வது பொருத்தமானதாகும்.

மேலும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி அதிகார பிரதேசத்திற்குள் நாட்டின் பல்வேறு கலாச்சார மற்றும் சமய வைபவங்களை அடிப்படையாக கொண்டு உள்ளூர் உணவு வகைகளின் உற்பத்திகள் மற்றும் விற்பனைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான தொழில் முயற்சியாளர்களை இனங்காண முடியும். இங்கு அவர்களில் இருந்து திறமையான உற்பத்தி ஆற்றல்களை உடைய பெண்களை இனங்கண்டு அவர்கள் மூலம் ஏனைய உற்பத்தியாளர்களுக்கு பயிற்சியினை வழங்கலாம்.

**பொதுவான ஆலோசனைகள்**

1. மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பொருத்தப்பாட்டினைக் கொண்டுள்ள கருத்திட்டங்களை இனங்காண்பதற்கும் இப் பயிலுனர்களை தெரிவு செய்துகொள்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2. தெரிவு செய்யப்படுகின்ற பயனாளிகள் அனைவரும் சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும்.

3. கருத்திடத்தினை நடைமுறைப்படுத்தும் போது அராசாங்கத்தின் பெறுகைச் செயற்பாடுகள்,நிதிப்பிரமாணம் மற்றும் இச் சுற்றறிக்கை ஆலோசனைகளை பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

4. தேவையான சந்தர்ப்பங்களில் பயனாளிகளோடு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டு கருத்திடத்தினை ஆரம்பிக்கவேண்டி ஏற்படும்.

5. வழங்கப்படுகின்ற தொகையினை 2023ம் ஆண்டிற்குள் பயன்படுத்தி முடிக்கப்பட வேண்டியதுடன் விஷேடமாக நிர்மாண நடவடிக்கைகளில் கருதிட்டத்தினை குறைவேலையாக வைத்தலாகாது.

6. பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,கருத்திட்ட முகாமையாளர்,சமுதாய அடிப்படைச் சங்க உத்தியோகத்தர்கள் ஒன்று கூடி பிரிவில் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள்,வெற்றிகரமான குறிப்பிடட குறிக்கோள்களை நோக்கி பயணிக்கின்றதா என்பதனை கலந்துரையாடுதல், பிரச்சனைகளுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மற்றும் இற்றைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

7. இங்கு சமுதாய அடிப்படை அமைப்பு, பிரதேச அமைப்பு உத்தியோகத்தர்களும் கருத்திட்ட கண்காணிப்பின் பொருட்டு செயற்பாட்டு விதத்தில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டியதுடன் சமூக ரீதியான கணக்காய்வு ஒன்றின் பொருட்டு தேவையான சூழலை உருவாக்குதல்.

8. முன்னேற்றங்கள் தேவைப்படுகின்ற எச் சந்தர்ப்பத்திலும் தலைமைக்காரியாலயத்திற்கு வழங்கக் கூடிய பிரகாரம் தயாரிப்பதற்கும் இற்றைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.ஒவ்வொரு மாதத்தின் இறுதித் திகதியில் தயாரித்த முன்னேற்ற அறிக்கையினை இணைப்பு இலக்கம்-01இன் பிரகாரம் அடுத்து வரும் மாதத்தின் 10ம் திகதிக்கு முன்னர் samurdhimarketing@gmail.com ஊடாக சந்தைப்படுத்தல் பணிப்பாளருக்கு கிடைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.பயிற்சியை பெற்றுக் கொண்ட பெண்கள் தொடர்பான தகவல்களை பயிற்சி வேலைத்திட்டங்கள் முடிந்தவுடனேயே இணைப்பு இலக்கம்-02ற்கு அமைய வழங்குதல்.

9. சகல கருத்திட்டமும் செயற்படுவது தொடர்பில் மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி/மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், மாவட்ட சமுர்த்தி பிரதி/உதவிப் பணிப்பாளர்கள் நிதமும் கவனத்தினை செலுத்துதல் வேண்டும்.

மேற்படி சகல வேலைத்திட்டங்களையும் வெற்றிகரமாக்கிக் கொள்ள தாங்கள் உட்பட சகல சமுர்த்தி உத்தியோகத்தர்களும் அர்ப்பணிப்பினை போற்றி மதிப்பதுடன் இது தொடர்பான மேலதிக விபரங்களை 011-2187547 என்ற இலக்கத்தினுடைய தொலைபேசியூடாக அல்லது samurdhimarketing@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாக சந்தைப்படுத்தல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு விநயமுடன் அறியத்தருகிறேன்.

ஆர்.பி.பி. திலக்கசிரி

பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்

1.செயலாளர்- மகளிர் , சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - த .கூ .க .பொருட்டு

2.கணக்காய்வு தலைமையதிபதி - த .கூ .க .பொருட்டு

3.பிரதம கணக்காளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம - த .கூ .க .பொருட்டு, உ .ந பொருட்டும்

4.பிரதான உள்ளகக் கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம - த .கூ .க .பொருட்டு, உ .ந பொருட்டும்

5.சகல பிரிவுத் தலைவர்கள் - த .கூ .க .பொருட்டு, உ .ந பொருட்டும்

**Translated By: - M.M.M. Jawhar (Translator)**
**Department of Samurdhi Development**

இணைப்பு -01

## சமுர்த்தி சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டம்-2023
## .......................................மாத முன்னேற்றம்

மாவட்டம்................................ நிதி ஒதுக்கீடு: ரூபா...............................

| இல | வேலைத்திட்டம் | கிடைத்த நிதி ஒதுக்கீடு | செலவு (ரூபா) | பௌதீக முன்னேற்றம் | | பயனாளிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | முன்னேற்றம் (%) | பெண்கள் | ஆண்கள் |
| 1 | சிறியளவிலான விற்பனையகங்களை ஆரம்பித்தல் | | | | | | |
| 2 | சமுர்த்தி ஆரோக்கிய உணவகங்கள்,விற்பனை நிலையங்களை மேம்படுத்தல் மற்றும் விற்பனைச் சந்தையை ஆரம்பித்தல் | | | | | | |
| 3 | புதிய உணவகங்களை ஆரம்பித்தல் | | | | | | |
| 4 | சமுர்த்தி அபிமானி விற்பனைக் கண்காட்சி | | | | | | |
| 5 | தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம் | | | | | | |
| 6 | இணையத்தளத்தினூடாக பொருட்களின் விற்பனை | | | | | | |
| 7 | வர்த்தக சங்கங்களை ஆரம்பித்தல் | | | | | | |
| 8 | மொழித் தேர்ச்சியினை வழங்கும் பொருட்டு பயிற்சி வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் | | | | | | |
| 9 | சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளின் பொருட்டு தர நிர்ணய சான்றிதழை வழங்குதல் | | | | | | |
| 10 | தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டம் | | | | | | |
| 11 | நச்சுப் பொருட்களற்ற உணவுகள் மற்றும் உள்ளூர் உணவுகள் தொடர்பான பயிற்சி வழிகாட்டல் | | | | | | |
| | மொத்தம் | | | | | | |

................................................ ................................................ ................................................

தயாரித்தவர் :
முகாமையாளர்(சந்தைப்படுத்தல்/வாழ்வாதாரம்)

பரீட்சித்தவர்
முகாமையாளர்(கணக்கீடு)

அங்கீகரித்தவர்
மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் /பிரதி /உதவிப் பணிப்பாளர்

**இணைப்பு-02**

## நச்சுப் பொருளற்ற உணவுகள்,உள்ளூர் உணவுகள் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம்

மாவட்டம்:…………………………………….

| தொடர் இலக்கம் | பி.செ | பயிற்சியினை நடாத்திய இடமும் திகதியும் /செலவாகிய தொகை (ரூபா) | பங்குபற்றிய பெண்களின் பெயரும் முகவரியும் | தொலைபேசி இலக்கம் | வளனர்கள் தொடர்பான தகவல்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

…………………… தயாரித்தவர்

……………….. பரீட்சித்தவர்

…………………. அங்கீகரித்தவர்
மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்/பிரதி /உதவிப் பணிப்பாளர்